Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D., Phone: 0422 - 6611302
Public Relations Officer & Fax: 0422 – 2431821
Professor (Agronomy) E-mail: pro@tnau.ac.in

To Date: 20-2-2013
The Editor,

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

**<u>Masipattam Sown Cotton Price will be Stable</u>**

In the last (2011-12) and current cotton year (Oct-Nov), prices are not favorable to cotton farmers. It was around Rs 3800 to Rs.4200 per quintal for the past 18 months. Higher price (Rs.6400/Quintal) in 2010-11 encouraged cotton production in India. Inspite of huge exports (128.81 lakh bales) from India in 2011-12, the price didn't rise due to higher stock position. China has been the largest buyer of Indian cotton and bought more than 70% of the India's exports in 2011-12. India exported around 85 to 90 lakh bales to China during 2011-12. This year, China's huge cotton inventory (50% of global) reduced export opportunities. India's cotton exports as on today is 57 lakh bales.

Government of India estimated that the area under cotton during 2012-13 will be marginally lower by around 5 per cent at 117.73 lakh hectares compared to 121.8 lakh hectares last year. Most of the decline in area (29.62 l.ha to 23.63 l.ha) and production (120 lakh bales to 85 lakh bales) in Gujarat is made up by higher yields in rest of India and higher area in Andhra Pradesh. The Cotton Advisory Board has estimated a crop size of 330 lakh bales and consumption of 234 lakh bales for 2012-13. To protect cotton farmers, Government has increased minimum support price of cotton price to Rs.3900 /Qtl from Rs.3300 / Qtl for long staple cotton.

Tamil Nadu, being the major consumer of cotton in India (47%) produces five lakh bales from 1.2 lakh hectares. Masipattam (Feb-March) is a special season for cotton in Tamil Nadu and MCU 5, MCU 7, Surabhi, Suvin and Bt varieties are mostly cultivated in this season under cent percent irrigation. To facilitate farmers to take up sowing decisions,

NAIP –Domestic and Export Market Intelligence Cell functioning in Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analysed cotton prices that prevailed in Konganapuram Cooperative Marketing Society and it is informed that prices of cotton (long staple) will be around Rs.4200-4500 per quintal in July - August, 2013, during harvest of cotton to be sown in Masipattam. Increase in export orders, if any, from China, Bangladesh and Pakistan may bring positive changes in prices; Otherwise the price will be stable. Hence farmers are advised to take up sowing with varieties suitable for the Masipattam taking into account the above prices.

**For further details contact:**


Domestic and Export Market Intelligence Cell,
Centre for Agricultural and Rural Development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641 003.
Phone: 0422-2431405


**For Technical Details please contact**


Professor and Head,
Department of Cotton,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641003.
Phone: 0422-2456297


Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-2-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மாசிப் பட்டப் பருத்தியின் விலை சீராக இருக்கும்

கடந்த ஆண்டு (2011-12) மற்றும் நடப்புப் பருத்தி ஆண்டுகளில் (அக்டோபர் - செப்டம்பர்) பருத்தியின் விலை விவசாயிகளுக்கு சாதமாக இல்லை. தொடர்ந்து 18 மாதங்களாக பருத்தியின் விலை குவிண்டாலுக்கு ரூ.3800 முதல் ரூ.4200 ஆக இருந்து வருகிறது. இந்தியாவில் 2010-11 இல் ஏறிய பருத்தியின் விலையானது (ரூ.6400 / குவிண்டால்) பருத்தி உற்பத்தியை அதிகரித்தது. ஆனால் 2011-12ல் அதிகபட்ச ஏற்றுமதியை (128.81 இலட்சம் பொதிகள்) எட்டிய போதும், அதிக அளவு பருத்தி இருப்பால் விலை ஏற வில்லை. 2011-12 இல் இந்தியாவின் பருத்தி ஏற்றுமதியில் 70 சதவீதம் (85 முதல் 90 இலட்சம் பொதிகள்) சீனாவிற்கு செய்யப்பட்டது. இந்த ஆண்டு சீனாவின் அதிகக் கையிருப்பு (உலக இருப்பில் 50 சதவீதம்) ஏற்றுமதி வாய்ப்புகளை குறைத்துள்ளது. இதுவரை இந்தியாவின் ஏற்றுமதி 57 இலட்சம் பொதிகளாக உள்ளது.

இந்திய அரசாங்கத்தின் கணக்கீட்டின் படி 2012-13ல் பருத்தி சாகுபடிப் பரப்பு கடந்த ஆண்டைவிட 5 சதவீதம் குறைந்து 117.73 இலட்சம் எக்டராக இருக்கும் (2011-12ல் 121.8 இலட்சம் எக்டர்). குஜராத் மாநிலத்தில் குறைந்த சாகுபடிப்பரப்பு (29.62 லிருந்து 23.63 இலட்சம் எக்டராக) மற்றும் உற்பத்தியை (120 லிருந்து 85 இலட்சம் பொதிகளாக) மற்ற மாநிலங்கள் குறிப்பாக. ஆந்திராவின் அதிகரித்த சாகுபடிப் பரப்பு ஈடுகட்டியுள்ளது.

பருத்தி ஆலோசனைக் கழகத்தின் கணக்கீட்டின்படி இந்தியாவின் பருத்தி உற்பத்தி 2012-13ல் 330 இலட்சம் பொதிகளாகவும், தேவை 234 இலட்சம் பொதிகளாகவும் இருக்கும். பருத்தி விவசாயிகளுக்கு உதவும் வகையில் இந்திய அரசாங்கம் பருத்திக்கான குறைந்த பட்ச ஆதார விலையை நீண்ட இழைப் பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ.3900 ஆக உயர்த்தி உள்ளது.

இந்தியாவின் பருத்தி உற்பத்தியில் 47 சதவீதத்தை பயன்படுத்தும் தமிழ்நாட்டில் 1.2 இலட்சம் எக்டரில் 5 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. மாசிப்பட்ட பருத்தியானது

(பிப்ரவரி-மார்ச்) தமிழ்நாட்டில் மட்டுமே பயிரிடப்படும் பருவமாகும். இப்பருவத்தில் எம்.சி.யு 5,7 சுரபி, சுவின் மற்றும் பிடி பருத்தி இரகங்கள் நீர் பாசனத்துடன் பயிரிடப்படுகின்றன. மாசிப்பட்டத்தில் பருத்தி பயிரிடும் முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய விலைகளை ஆய்வு செய்ததில், மாசிப் பட்டத்தில் விதைக்கப்பட்டு ஜுலை - ஆகஸ்ட் 2013ல் அறுவடைக்கு வரும் நீண்ட இழைப் பருத்தி குவிண்டாலுக்கு ரூபாய் 4200 முதல் 4500 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. சீனா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் நாடுகளிலிருந்து ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்தால் விலை உயர வாய்ப்பு உள்ளது; இல்லையென்றால் விலை சீராக இருக்கும். மாசிப்பட்டத்தில் மேற்கூறிய விலைகளை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் தகுந்த இரகங்களை பயிரிடும்படி சிபாரிசு செய்யப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2431405

**தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பருத்தி துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி: 0422-2456297

மக்கள் தொடர்பு அலுவலர்